• Dinakaran • Puducherry • 23.7.2024

## ஜிப்மரில் எம்எஸ்சி நர்சிங் உள்ளிட்ட

# மருத்துவம் சார்ந்த படிப்புகளுக்கு நுழைவுத்தேர்வு முடிவு வெளியீடு

புதுச்சேரி, ஜூலை 23: ஜிப்மரில் எம்எஸ்சி நர்சிங், அலைடு ஹெல்த் சயின்ஸ் உள்ளிட்ட மருத்துவம் சார்ந்த முதுநிலை படிப்புகளுக்கான நுழைவுத்தேர்வு முடிவு நேற்று வெளியானது.

புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள ஜிப்மரில் எம்.எஸ்.சி அலைடு ஹெல்த் சயின்ஸ்-23, எம்.எஸ்.சி. நர்சிங்-31, எம்பிஎச் (மாஸ்டர் ஆப் பப்ளிக் ஹெல்த்)-34, பிபிடிஎன் (போஸ்ட் பேசிக் டிப்ளமோ இன் நர்சிங்)-19, இதர பட்டமேற்படிப்பு பாடப்பிரிவுகள்-12, எம்பிஐபி (மெடிக்கல் பிசிக்ஸ் இன்டர்ன்ஷிப் புரோக்ராம்)-4 என மொத்தம் 121 இடங்கள் உள்ளன.

இந்த இடங்களுக்கான மாணவர் சேர்க்கை ஆண்டுதோறும் ஆன்லைன் முறையில் நுழைவுத்தேர்வு நடத்தி நிரப்பப்படுகிறது. அந்த வகையில் 2024-25ம் கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கைக்கு கடந்த மே 23ம் தேதி முதல் ஜூன் 20ம் தேதி மாலை 4.30 மணி வரை ஜிப்மர் இணையதளத்தில் விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

தொடர்ந்து, ஜூலை 7ம் தேதி காலை 9 மணி முதல் 10.30 மணி வரை பெங்களூரு, சென்னை, புதுச்சேரி உட்பட்ட 9 நகரங்களில் ஆன்லைனில் நுழைவுத் தேர்வு நடைபெற்றது. இத்தேர்வு முடிவுகள் மற்றும் ஒவ்வொரு பிரிவு வாரியாக தற்காலிக தகுதி பட்டியல் ஜிப்மர் இணையதளத்தில் நேற்று வெளியிடப்பட்டது. கலந்தாய்வு தேதி தொடர்பான விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும். புதிய தகவல்களுக்கு விண்ணப்பதாரர்கள் தொடர்ந்து ஜிப்மர் இணையதளத்தை பார்க்குமாறும், இதுதொடர்பான கூடுதல் தகவல்களுக்கு விண்ணப்பதாரர்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சலை தவறாமல் பார்க்குமாறும் ஜிப்மர் நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

இதேபோல், ஜிப்மரில் பி.எச்.டி உயிர்வேதியியல் - 2, தடுப்பு மற்றும் சமூக மருத்துவம் - 1, மருத்துவ புற்றுநோயியல் - 1, மகப்பேறியல் - 1 என 5 இடங்கள் உள்ளன.

இந்த இடங்களை நிரப்புவதற்கு கடந்த 7ம் தேதி ஆன்லைன் மூலம் நுழைவுத் தேர்வு நடைபெற்றது. இத்தேர்வு முடிவுகளும் நேற்று வெளியானது.